**O.S.No.163/2020**

**PW2 :** ஜெய்சங்கர் தேதி 23.02.2026

வாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி என்னுடைய தாய்மாமன். வாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் ஆடிட்டராக வேலை செய்கிறேன். பிரதிவாதியும் எனக்கு உறவினர் தான், அவருக்கு மதிப்புமிக்க விவசாய நிலங்கள் வீட்டிடம் உள்ளது என்பது எனக்கு தெரியும். அவர் குடியிருந்து வரும் ஈ.வி.என் ரோட்டில் 4 வீட்டிடமும், ஒரு வணிக கடையும் உள்ளது என்றால் சரிதான். அதில் மாதம் ரூ.40000 வருமானம் வருமா என்றால் அது பழைய கட்டிடம் என்பதால் எவ்வளவு வாடகை வருகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட பூமியில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் பிரதிவாதி விவசாயம் செய்வது இல்லை, குத்தகைக்கு விட்டு வருகிறார். பிரதிவாதி விவசாயம் தான் செய்து வருகிறார் என்றும், விவசாயம் மூலம் தான் அவருக்கு வருமானம் வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது. வருமானவரி சட்டத்தின்படி பணபரிவர்த்தனை ரூ.2 லட்சத்திற்கு மேல் இருந்தால் அது வங்கி மூலமாக தான் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும் என்றால் உறவினர்களுக்கு நேரடியாக கொடுக்கலாம், மற்றவர்களுக்கு அதிக தொகையாக இருந்தால் வங்கி மூலம் தான் கொடுக்க இயலும். நான் எம்.காம். படித்துள்ளேன். ஆடிட்டிங் சம்பந்தமாக நான் charatered tax practitioner படித்து இருக்கிறேன். அவ்வாறு உறவினர்களுக்கு ரூ.2 லட்சத்திற்கு மேல் தொகை கொடுக்கலாம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாய்மாமன் வாதி தொழில் செய்யவில்லை, விவசாயம் செய்கிறார். அவர் தொழிலை விட்டு 20 வருடம் ஆகியிருக்குமா என்றால் 15 வருடம் ஆகியிருக்கும். தொழிலை நிறுத்திவிட்டதால் வாதிக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்று

சொன்னால் சரியல்ல, வீடு, கடை வாடகை வருகிறது. நானும், வாதியும் நெருங்கிய உறவினர் என்பதால் நான் வாதியிடம் அதிகமாக நெருக்கும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, பிரதிவாதியும் எனக்கு மாமா தான். பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதாகவும், அதற்கு சாட்சி கையெழுத்திட வர வேண்டும் என்று ஒரு நாள் முன்பாக வாதி என்னை அழைத்தார். இரண்டு புரோநோட்டுகளும் எழுதுவதற்கு முந்தைய நாள் என்னை அழைத்தார். புரோநோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வாதியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. நானும், பிரதிவாதியும் ஒன்றாக போனோம். வீட்டில் வாதி மட்டும் தான் இருந்தார், வேறு யாரும் இல்லை. புரோநோட்டை வாதியே வைத்திருந்தாரா என்றால் இல்லை, பிரதிவாதி எடுத்து வந்திருந்தார். புரோநோட்டில் கண்டுள்ள தொகை ஒரு தவணையில் கொடுக்கப்பட்டதா அல்லது பல தவணையில் கொடுக்கப்பட்டதா என்றால் ஒரே தவணையில் கொடுக்கப்பட்டது. வாதிக்கும், பிரதிவாதிக்கும் கனகபுரத்தில் விவசாய பூமிகள் இருக்கும் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட பூமியை வீட்டு மனைகளாக மாற்றம் செய்ய முயற்சி செய்து வரும் விபரம் தெரியுமா என்றால் வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து வீட்டுமனைகளாக மாற்றம் செய்ய போவதாக சொல்லியிருந்தார். பிரதிவாதி விவசாயம் செய்து வருவதால் அவருக்கு பாத்தியப்பட்ட பூமியை வீட்டுமனைகளாக மாற்றம் செய்ய சம்மதம் தெரிவிக்கவில்லை என்ற விபரம் தெரியுமா என்றால் அது தெரியாது. அதனால் இருவருக்கும் மன வருத்தம் இருந்தது என்ற விபரம் கேள்விபட்டேன். பிரதிவாதிக்கு போதிய வருமானம் உள்ளது என்றும், அவருக்கு வாதியிடமிருந்து கடன் பெற வேண்டிய தேவையே இல்லை என்றும், வாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு போதிய வருமானம் இல்லை என்றும், நான் சொல்வது போல் வா.சா.ஆ.1 மற்றும் 2 புரோநோட்டுகள் பிரதிவாதியால் வாதிக்கு எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றும், அதை நான் எழுதி சாட்சி கையொப்பமும் செய்யவில்லை என்றும், எனது தாய்மாமா வாதி கேட்டுக்கொண்டதன்படி வழக்கிற்காக மோசடியாக இரண்டு புரோநோட்டுகளையும் தயார் செய்து அதன் அடிப்படையில் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. இருவருக்கும் இடையே மன வருத்தம் இருந்த நிலையில் பிரதிவாதி வாதியிடமிருந்து கடன் வாங்கியிருக்க மாட்டார்

என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் தாவா புரோநோட்டுகள் எழுதவில்லை என்றும், வாதி பிரதிவாதிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றும், என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றும் சொன்னால் சரியல்ல.